# வழுவூர்க் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் ஹைஸ்கூல்
முன்னைத் தமிழ் ஆசிரியரும்,
H. R. E. போர்டு ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய

**திரு R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**
**எழுதப்பெற்று**

வழுவூர் வீரட்டேஸ்வரர் தேவஸ்தானம் மானேஜர்
திரு. N. இராஜமாணிக்கம் அவர்கள்

கௌரவ தர்மகர்த்தர்
திரு. A. M. S. முத்தையன் செட்டியார் அவர்கள்
ஆகியோரால் வெளியிடப்பெற்றது.

---

**தேவஸ்தான வெளியீடு.**

---

**உரிமை செய்யப்பெற்றது]** 1950 **[விலை 4 அணா**

# முன்னுரை

---

தெய்வ உணர்ச்சியை உண்டாக்குதற்குரிய சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. தென்னாட்டில் உள்ள தலங்களில், வைப்புத்தலங்களில் ஒன்றாக வழுவூர் உள்ளது. அட்ட வீரட்டங்களில் இது ஒன்று. இது தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலூகாவில் உள்ளது. கோயில் தரிசனத்துக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் (Hindu Religious Endowments Board) அனுப்பிய சுற்றறிக்கையின்படி, இவ்வரலாறு பழய புராணத்தைத் தழுவிச் சுருக்கமாய் எழுதப்பெற்றது. இதில் பழம் பெருமைகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுச் செய்திகளும், துதிப் பாடல்களும் உள்ளன. அன்பர்கள் படித்து வழுவூர்ப் பெருமானின் அருள் வளத்தைப் பெறுக.

திருச்சிராப்பள்ளி
30—4—50

R. பஞ்சநதம் பிள்ளை,
தமிழ் ஆசிரியர்.

---

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் ... ... | 5 |
| 2. | தலத்தின் பெயர்கள் ... ... | 7 |
| 3. | கோயிலின் அமைப்பு ... ... | 7 |
| 4. | கோயிலின் படம் ... ... | 8 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் ... ... | 9 |
| 6. | தீர்த்தங்கள் ... ... ... | 9 |
| 7. | தலப் பெருமைகள் ... ... | 10 |
| 8. | சுற்றுக்கோயில்கள் ... ... | 12 |
| 9. | திருப்பணிகள் ... ... ... | 12 |
| 10. | சிற்பச் சிறப்புக்கள் ... ... | 13 |
| 11. | தினப்பூஜையும் திருவிழாக்களும் ... | 14 |
| 12. | வருமானமும் சொத்துக்களும்... ... | 15 |
| 13. | நிர்வாகம் ... ... ... | 15 |
| 14. | கல்வெட்டுக்கள் ... ... ... | 15 |
| 15. | புராண வரலாறுகள் ... ... | 19 |
| 16. | இலக்கியப் பாடல்கள் ... ... | 23 |

உ

சிவமயம்

# வழுவூர்க் கோயில் வரலாறு

---

## 1. கோயிலும், இருப்பிடமும்

ஆதி அந்தங் கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும்வண்ணம் தன் உயர்ந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து, பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப் பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" —(சிவஞானசித்தியார்). ஆதலின், "அரிதரிது மானிடராதல் அரிது" என்றவாறு, பெறுதற்கரிய மக்கள் பிறப்பைப் பெற்றவர் அனைவரும், பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்

னெறியில் ஒழுகி, அவனருளைப் பெற முயலுதல் தலையாய மனிதர்க்குரிய கடமையாகும்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், வைணவக் கோயில்கள் எனப் பல பிரிவுகளுள் அடங்கும். சிவன் கோயில்களில் சைவ சமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற 274 தலங்களும், தேவாரப் பதிகங்களில் பெயர் மாத்திரம் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்களும், பிற்காலத்தில் தோன்றிய அபிமானத் தலங்களும் உள்ளன.

இவைகளில் தேவாரம் பாடிய மூவர்களாலும், பதிகங்களில் பெயர் மட்டும் குறிக்கப்பெற்றவை வைப்புத் தலங்கள் எனப்படும். இப் பகுதியில் 249 தலங்கள் உள்ளன. இவைகளுள் வழுவூர் என்பது ஒன்று. இது கீழத் தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலூகாவில் மாயவரம் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே, மாயூரம்—திருவாரூர் சாலையில் 7 மைல் தூரத்தில் உள்ளது. மாயூரம்—திருவாரூர் கிளை இருப்புப்பாதையில் இலந்தங்குடி ரயில் நிலையத்திலிருந்து 6 பர்லாங் தூரத்தில் உள்ளது. மாயூரத்திலிருந்து மோட்டார் வண்டி மூலமாயும், இருப்புப் பாதை வழியாக இலந்தங்குடியிலிருந்தும் இவ்வூரை அடையலாம். இவ்வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளிக்கூடம் உண்டு. ஜனத் தொகை சுமார் 1000. பெரும்பாலோர் இசைவேளாளர்கள். பஞ்சாயத்து போர்டு ஆட்சி முறையில் உள்ளது.

## 2. தலத்தின் பெயர்கள்


இத்தலத்திற்கு வழுவூர் என்னும் பெயர் வழங்குகின்றது. பிரளய காலத்தில் உலகமெல்லாம் அழிந்தும், இவ்வூர் அழியாமல் வழுவின காரணத்தாலும்; ருத்ர பீஜம் இவ்விடத்தில் வழுவினதாலும், வழுவூர், வழுவை என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணம் அறிவிக்கின்றது. வடமொழியில் ச்யுதபுரி என்று சொல்லப்படுகிறது. பல தலங்களின் நடுவில் மேலான கைலாசம்போன்று விளங்குவதால் பரகைலாசம் என்றும், தன்னை அடைந்தவர்களுக்குச் சிவஞானத்தை அருள்வதால் ஞான பூமி என்றும், அண்டப் பிரம்மத்தலம் என்றும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் வழுகூர் என்பது காணப்படுகின்றது. வடமொழிப் புராணத்தில் பிப்பலாரண்யம் என்று சொல்லப்படுகிறது.

## 3. கோயிலின் அமைப்பு

கோயில் பெரிய கோயில். ஊருக்குச் சற்று பள்ளத்தில் உள்ளது. முன்னே பெரிய கோபுரம் கிழக்கு நோக்கி உள்ளது. சுமார் 150 அடி உயரத்தில் 5 கண்களைக் கொண்டு உள்ளது. கோபுரத்தைத் தாண்டிச் சென்றால் ஈசான தீர்த்தம் என்ற திருக்குளம் உள்ளது. சுவாமி அம்மன் சந்நிதிகள் தனித்தனியே கிழக்கு நோக்கி உள்ளன. கோயிலின் உள்ளே இருந்து வெளி மதில் வரையில் 4 பிரகாரங்கள் உள்ளன. வெளிப் பிரகாரத்தில் தேரோட்டம் நிகழும். தலத்திற்குரிய மரம் தேவதாரு மரம். அம்மன் சந்நிதிக்குப் பின்னே வன்னி மரம் உள்ளது. கோயிலின் சுற்றளவு தென்வடலில் 342 அடி. கிழமேலில் 380 அடி. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே சேர்க்கப்பெற்றுள்ளது.


## 4. கோயிலின் படம்

தென்வடல் அடி 342




### எண்களின் விளக்கம்

1. பெரியகோபுரம்
2. நந்தி
3. ஈசானதீர்த்தம்
4. 2வது வாயில்
5. தேவஸ்தான நிலையம்
6. 3வது வாயில்
7. சகஸ்ரலிங்கம்
8. அம்மன் சந்நிதி
9. சுவாமி சந்நிதி
10. ஞான சபை
11. பிக்ஷாடனர்
12. அறுபத்துமூவர்
13. விநாயகர்
14. முருகர்
15. லட்சுமி
16. நூற்றுக்கால் மண்டபம்



## 5. மூர்த்திகளின் பெயர்கள்

தலவிநாயகர் செல்வவிநாயகர் எனப்படுவர். சுவாமியின் பெயர் வீரட்டேஸ்வரர் என்பது. வடமொழியில் ஸ்ரீ கிருத்திவாசேஸ்வரர் என்பது. யானையின் தோலைப் போர்த்தியவர் என்பது பொருள். அம்மன் பெயர் ஸ்ரீ இளங்கிளை நாயகி என்பது. வட மொழியில் ஸ்ரீ பாலாங்குராம்பிகை எனப்படுவள். இளங்கிளை எவ்விதம் அழகு வாய்ந்ததாகவும், வளர்ச்சி உடைய தாகவும் காணப்படுகின்றதோ அவ்வாறே உலகத்தில் உயிர்களைத் தோன்றச் செய்து வளர்ச்சி அடையும்படி அருளுகின்றாள். கிருபாவதி என்ற பெயரும் உண்டு. பெருமாள் ஸ்ரீ லட்சுமி நாராயணர் எனப்படுவர். உற்சவ மூர்த்திகள், கஜசம்ஹாரர், மோகன பிக்ஷாடனர் எனப் படுவர். கல்வெட்டுக்களில் சுவாமியின் பெயர் வீரட் டானம் உடையார், வழுவூர் நாயனார் என்று சொல்லப் பட்டுள்ளது.

## 6. தீர்த்தங்கள்

பெருமானுக்குப் பொதுவாக ஐந்து முகங்கள் சொல்லப்படுவதுண்டு. அவை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. இவை களையன்றி அதோமுகம் என்னும் கீழ் நோக்கிய முகமும் உண்டு. "ஐந்து முகத்தோடு அதோ முகமும் தந்து" என்று கந்தர் கலிவெண்பா கூறும். இந்த ஐந்து முகங் களும் இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்களாக அமைந் துள்ளன. மேற்கில் சத்யோஜாதம் என்னும் தீர்த்தமும், வடக்கில் வாமதேவம் என்பதும், கிழக்கில் தற்புருடம்

என்பதும், தெற்கில் அகோரம் என்பதும், கோயிலின் நடுவில், பெருமானுக்கும் நந்தி தேவருக்கும் இடையில் ஈசானம் என்னும் சிவபாதாள கங்கையும் தீர்த்தங்களாக உள்ளன. இவைகள் பிரம்மதேவரால் உண்டாக்கப்பட்டுப் பஞ்சப்பிரம்ம மகா புண்ணிய தீர்த்தங்கள் எனப் பெயர் பெற்று விளங்குகின்றன. இவைகளையல்லாமல் மூகமோசனம், வித்யா தீர்த்தம், திரிவர்க்கம், ஞானம்ருதம் முதலிய வேறு பல தீர்த்தங்களும் சூழ்ந்துள்ளன. 'தீர்த்தனை சிவனை' என்றபடி பெருமானே தீர்த்தமாக விளங்குகின்றான். நீர், புறமாசைப் போக்கித் தூய்மைப்படுத்துவது போலத் தீர்த்தம் மனமாசைப் போக்கித் தூய்மைப்படுத்துகிறது.

## 7. தலப்பெருமைகள்

இத்தலத்துக்குரிய பெருமைகள் மிகப் பலவாகும். தேவார வைப்புத்தலங்களுள் ஒன்றாக உள்ளது. சுயம்பு மூர்த்தியைப் பெற்ற தலம். அதாவது பிறரால் ஆக்கப் பெறாமல் தானே மூர்த்தியாய் அமைந்த தலம். பெருமானுக்குரிய அட்ட வீரட்டங்களில்—எட்டு வீரஸ்தலங்களில் யானையை உரித்த இடம். பிற இடங்கள், திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருஅதிகை, திருப்பறியலூர் திருவிற்குடி, திருக்குறுக்கை, திருக்கடவூர் என்பன. அட்ட வீரஸ்தலங்களைப்பற்றிய செய்யுள் :—

" பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன்கட வூர்,இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே',

பெருமான் இவ்விடத்தில் யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து, யானையின் மத்தகத்தின்மேல் நின்று இடது உள்ளங்கால் தெரியும் வண்ணம் ஊர்த்துவ நடனம் ஆடுகிறார். இது நவதாண்டவங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. நடன சபைகளில் ஞான சபையாகப் போற்றப்படுகிறது. தாருகம் முதலிய ஐந்து வனங்களால் சூழப்பெற்றது. தேவதாரு மரத்தைக்கொண்டது. ஒன்பது வகையான தீர்த்தங்களை உடையது. அவற்றுள் ஈசானம் என்னும் தீர்த்தத்தை நடுநாயகமாக உடையது. தேவாரம் முதலிய பல பாடல்களைப் பெற்றது. வடமொழியில் புராணப் பெருமைகள் அமையப்பெற்றது. பல கல்வெட்டுக்களை உடையது. அகஸ்தியர், கண்ணன், உபமன்யு, சூரியன் முதலிய தேவர்களால் பூஜிக்கப்பெற்றது. தாருக முனிவர்களுக்கு பிக்ஷாடன வடிவத்தில் உபதேசிக்கப்பெற்றது. பிரளய காலத்திலும் அழியாது நிலைக்கப்பெற்றது. ஈசானம் முதலிய தீர்த்தங்களில் நியமத்துடன் ஸ்நானம் செய்வோருக்குப் பிரமஹத்திதோஷம் நீங்குவதுடன் நீங்காத நோய்களும் நீங்கும் பெருமை உடையது. பல தலங்களின் நடுவில் விளங்குவதால் பரகைலாசமென்று போற்றப்படுவது. சிதம்பரத்தில் ரகஸ்யப்பிரதிட்டை அமைந்திருப்பதுபோலவே இத்தலத்திலும் கஜசம்ஹாரமூர்த்திக்குப் பின்னே ரகஸ்ய யந்திரப் பிரதிட்டை உள்ளது. ஒரே லிங்கத்தில் 1000 சிறிய லிங்கங்களைக்கொண்ட சகஸ்ரலிங்கமூர்த்தியை உடையது. அமாவாசைதோறும் பற்பல இடங்களிலிருந்து மக்கள் வேண்டுதலுக்காகப் புறப்பட்டு வந்து பெருமானை வழிபட்டு வேண்டிய வரங்

களைப்பெற்றுச் செல்கின்றூர்கள். உலோகச் சிலைகளில் கஜசம்ஹாரமூர்த்தியும், பிக்ஷாடனமூர்த்தியும் மிகவும் அழகிய முறையில் பார்ப்பவர் மனம் பரவசம் அடையும் படி அமைந்துள்ளன. உலோகத்தாலான அம்மன் சிலையில் கையில் முருகனைக் குழந்தையாக வைத்துக் கொண்டிருக்கிறுள். பெருமானைக் குழந்தை சுட்டிக் காட்டுவதுபோல அமைந்துள்ளது.

## 8. சுற்றுக்கோயில்கள்


இத்தலத்தைச் சேர்ந்த சுற்றுக்கோயில்கள் ஆவன, ஐயனுர் கோயில், பிடாரி கோயில், நெய்க்குப்பை பிடாரி யம்மன் கோயில், பண்டாரவாடை பிடாரி கோயில், பெரியேரிகாளி கோயில், முதலியன.

## 9. திருப்பணிகள்

இக்கோயிலில் இதற்குமுன் கோயில் பழுதுபார்க்கப் பட்டும் திருப்பணிகள் செய்யப்பட்டும் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டிருக்கிறது.

1. காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆதரவில் கோயில் திருப்பணி செய்யப்பட்டு 20—6—1941-ல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

2. கஜசம்ஹாரமண்டபத்தில் சுவரில் அமைந்திருந்த ஸ்ரீ ஞானசபாபதி யந்திரப்பிரதிட்டை 7-11-41ல் ஸ்ரீ ஜகத்குரு சுவாமிகளின் மேற்பார்வையில் புதுப்பிக்கப்பட்டது.



உள்வாயிலும் ஈசான தீர்த்தமும்

3. மேற்படி யந்திரப்பிரதிட்டை செப்புத்தகட்டில் அமைக்கப்பட்டு 12—5—49-ல் லக்ஷார்ச்சனைப் பூஜை செய்து புதுப்பிக்கப்பட்டது.

## 10. சிற்பச் சிறப்புக்கள்

கோயிலுக்கு முன்னே உள்ள கோபுரம் 5 கண்களுடன் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோபுரமும் மதிலும் அழகப்பெருமாள் பிள்ளை என்பவரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. நூற்றுக்கால் மண்டபத்தில் உள்ள தூண்கள் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. பேரளம் சொக்கு முதலியார் என்பவரால் கொலுமண்டபம் அமைக்கப்பட்டது. சுவாமி சந்நிதிக்கு முன்னே உள்ள சிறு மண்டபத்தில் ஒரே லிங்கத்தில் 1000 சிறு லிங்கங்கள் அமைக்கப்பெற்ற சகஸ்ரலிங்கம் உள்ளது. உற்சவச் சிலைகளில் கஜ சம்ஹாரர், பிக்ஷாடனர், அம்மன் சிலைகள் அழகிய தோற்றத்துடன் விளங்குகின்றன. கஜ சம்ஹார மூர்த்தியின் ஊர்த்துவ நடனக்காட்சி உள்ளங்கால் தெரியும்வண்ணம் தூக்கியிருப்பது பார்க்குந்தோறும் பக்தியை உண்டாக்குகின்றது. அம்மன் கையில் முருகன் குழந்தையாகக் காட்சிதருகின்றான். கோயிலின் மத்தியிலுள்ள ஈசானத் தீர்த்தம் என்னும் திருக்குளம் சுற்றிலும் படித்துறைகளுடன் அழகாக அமைந்துள்ளது. பெருமான் கோயில் பிரகாரத்தில் புராண வரலாறுகளைக் குறிக்கும் சித்திரங்கள் சுவரில் எழுதப்பெற்றுள்ளன.

## 11. தினப் பூஜையும் திருவிழாக்களும்

இத் தலத்தில் உள்ள பெருமானுக்கும் பிற மூர்த்திகளுக்கும் தினந்தோறும் விடியற்காலை—காலை—உச்சி—மாலை—2-ங் காலம்—இரவு ஆகிய ஆறு காலங்களிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. 2-ங் காலத்துக்கும் இரவுக்கும் நடுவேளையில் யந்திரப் பிரதிஷ்டைக்கும் பூஜை நடைபெறும்.

ஆண்டில் ஆறுமுறை, சித்திரை மாதம் திருவோண நாளிலும், ஆனி உத்திரத்திலும், ஆவணி—புரட்டாசி மாதங்களில் சதுர்த்தசி நாளிலும், மார்கழியில் திருவாதிரை நாளிலும், மாசி சதுர்த்தசி தினத்திலும், கஜ சம்ஹாரமூர்த்திக்கும், நடராஜப் பெருமானுக்கும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் அபிஷேகங்கள் நடைபெறும்.

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் திருவிழா நடைபெறுவது வழக்கம். தற்சமயம் திருவிழா நிறுத்தப் பட்டுள்ளது. ஆனால் மாதந்தோறும் நிகழவேண்டிய பிற விழாக்கள் நடைபெற்று வருகின்றன. மாசி மாதம் மக நாளில் பௌர்ணமி அன்று உதய காலத்தில் பெருமான் கஜ சம்ஹாரம் செய்து நடனக் காட்சி தருவன். மார்கழி திருவாதிரை நாளிலும் உதய காலத்தில் கோயிலுக்குள் கஜ சம்ஹார நடனம் நிகழும். திருவாதிரைக்கு முதல் நாளில் புனர்பூசத்தில் கஜ சம்ஹாரமூர்த்தி வெண்மை அலங்காரத்துடன் காட்சி யளிப்பர். பிற மாதங்களில் ஆனித் தரிசன விழாவும்,

ஆடிப்பூர விழாவும், நவராத்திரி விழாவும், கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சுவாமி புறப்பாடும், தீபக் காட்சியும் மார்கழித் திருவாதிரை விழாவும், தை மாதம் மாட்டுப் பொங்கல் விழாவும் அந்தந்த மாதங்களில் நடைபெறும்.

## 12. வருமானமும் சொத்துக்களும்

கோயிலுக்கு ஆண்டு தோறும் சுமார் 5000 கலம் நெல்லும், ரொக்கமாக ரூ. 2000மும் வருமானமாகக் கிடைக்கின்றன. சுமார் ரூ. 10000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. வெள்ளி ரிஷப வாகனம் ஒன்றும், மற்ற மர வாகனங்களும் உள்ளன. கோயிலுக்குத் தேர் இல்லை. அவ்வப்போது கட்டுத் தேர் கட்டப்படுகின்றது.

## 13. நிர்வாகம்

இத்தலத்தின் நிர்வாகம் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டி மேற்பார்வையில் இருந்து வந்தது. 1927ல் ஸ்கீம் ஏற்பட்டு, 1946-ம் ஆண்டிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்புக்கழகத்தின் (Hindu Religious Endowments Board) நிர்வாகத்தில் இருந்துவருகிறது. ஷை போர்டாரால் நியமிக்கப்பட்ட மானேஜர் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். போர்டாரால் நியமனம் செய்யப்பெற்ற தர்மகர்த்தா (Trustee) வும் உடனிருந்து கவனித்து வருகிறார்.

112762

## 14. கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப்பற்றிய 15 கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டுப் பகுதிகளில் 1912வது ஆண்டில்

MADRAS
Q 23:38.21193
N50

418 முதல் 432 வரையில் உள்ள எண்களில் சர்க்காரால் நகல்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களால் கோயிலைப்பற்றிய பல செய்திகள் தெரியவருகின்றன. அக்காலத்தில் இவ்வூர் வழுகூர் என்றும், இவ்வூர்ப் பகுதி திருவழுந்தூர் நாடு என்றும், அது ஜயங்கொண்ட சோழவளநாட்டைச் சேர்ந்ததென்றும், பெருமானின் பெயர் வீரட்டானம் உடையார்—வழுவூர் நாயனுர் என்றும், கோயிலில் விளக்கு இடுவதற்கும், பூஜைக்கும், திருவெம்பாவை ஓதுவதற்கும் பொருள் வழங்கியிருப் பதும், கோபுரம், மதில் முதலியன அழகப்பெருமாள் பிள்ளையால் கட்டப்பட்டதென்றும், பிற திருப்பணிகள் செய்யப்பட்ட விவரங்களும் தெரியவருகின்றன. கல் வெட்டுச் செய்திகள் வருமாறு:—

1. 418—1912. வீரட்டானேஸ்வரர் கோயிலின் தென் சுவரில் பரகேசரிவர்மன்—இரண்டாவது ராஜ ராஜ தேவ சோழனது 11வது ஆண்டில், ஜயங்கொண்ட சோழவளநாட்டைச் சேர்ந்த திருவழுந்தூர் நாட்டில் உள்ள வழுகூர் வீரட்டானம் உடையார்க்கு விளக் கிடுவதற்குப் பொருள் வழங்கியது.

2. 419. மேற்கண்ட அரசனது 15-வது ஆண்டில் 27—9—1160 செவ்வாய்க்கிழமை ஆயில்ய நாளில், குந்தவ்வைத்தேவியின் நினைவாக ஆற்காடு கூற்றத்தைச் சேர்ந்த சித்தர் காட்டில் இருந்த ஒருவரால் விளக்குகள் எரிப்பதற்குப் பணம் தானம் செய்தது.

3. 420. ஷை தென் சுவரில் 3வது குலோத்துங்க சோழனது 3-வது ஆண்டில் வழுவூர் நாயனுர் பூஜைக்

காக மூலங்குடியிலுள்ள ஒருவரால் நிலம் கொடுக்கப் பெற்றது.

4. 421. ஷை சுவரில் 2வது ராஜாதிராஜ தேவ சோழனது 5-வது ஆண்டில் 1—7—1167 சனி நாளில், கோயிலில் திருவெம்பாவைப் பாடல் பாடுவதற்கும், மார்கழித் திருவாதிரை, பங்குனி விழா முதலியன நடைபெறுவதற்கும் பொருள் வழங்கப்பெற்றது.

5. 422. விஜயநகர மன்னன் வீரபொக்கண்ண உடையார் காலத்தில் சகம் 1324-ல் காவிரி வெள்ளத் தால் நஷ்டமடைந்த நிலங்களுக்குத் தீர்வை அனுகூலம் செய்தது.

6. 423. ஷை இடத்தில் மதுரை, ஈழம், கருவூர் களைக் கொண்ட திரிபுவன வீரதேவ சோழனது 33-வது ஆண்டில் (1178—1216) ஓர் பிராமணப் பெண்ணால் பொருள் வழங்கியது.

7. 424. மண்டபத்தின் மேல் சுவரில் விஜயநகர மன்னன் இரண்டாவது பிரதாப தேவராயரின் காலத் தில், சகம் 1356-ல் கோயிலில் புதுத் திருப்பணிகள் செய்யப்பட்டுக் குளமும், வாய்க்காலும் வெட்டப் பட்டது.

8. 425. 3-வது ராஜேந்திர சோழ தேவனது 2-வது ஆண்டில் விளக்கிடுவதற்குப் பொருள் அளித்தது.

9. 426. மண்டபத்தின் வட சுவரில், பாண்டிய மன்னன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனது 6-வது

ஆண்டில் (30—12—1276) கோயிலைச் சேர்ந்த வீட்டின் வாடகை வசூல் செய்யப்பெற்றது.

10. 427. ஷ சுவரில், 3வது குலோத்துங்க சோழனது 2-வது ஆண்டில் (15—5—1180) வியாழன் திருவோண நாளில் சூரத்தூர் நாட்டைச் சேர்ந்த மோடப்பாக்கம் ஊர்வாசியால் விளக்கிடுவதற்குப் பொருள் வழங்கியது.

11. 428. ஷ சுவரில் 2-வது ராஜாதி ராஜதேவ சோழனது 15-வது ஆண்டில் 18—8—1177 வியாழன் ரோகணி நாளில் திருவாரூர்க் கூற்றத்தைச் சேர்ந்த தீயன் குடிவாசியால் வீரட்டானம் உடையார்க்கு விளக்கிடுவதற்கு நிலம் வாங்கப் பொருள் வழங்கியது.

12. 429. சுவாமி கோயிலின் முதல் பிரகாரத்தில், வடபுறத்துத் தாழ்வாரத்தில், 3-வது குலோத்துங்க சோழனது 5-வது ஆண்டில், கோயிலின் வடபுறத்தில் அம்மன் கோயில் கட்டப்பட்ட செய்தியும், கோயில் பூஜைக்கு நிலம் வாங்கப் பொருள் கொடுத்த விவரமும் உள்ளன.

13. 430. கோபுரவாயிலின் இருபக்கங்களிலும், இருங்கொளப்பாண்டி நாட்டைச் சேர்ந்த நல்லாவூர் கணபதி நாயனுர் பிள்ளை மகன் அழகப்பெருமாள் பிள்ளையால் கோபுரமும் மதிற்சுவரும் கட்டப்பட்ட விவரம் உள்ளது.

14. 431. மேற்கண்ட கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் ஷ அழகப்பெருமாள் பிள்ளையால்

பிக்ஷாடன மூர்த்தியின் உருவச்சிலை வழங்கப்பெற்ற விவரம்.

15. 432. இவ்வூரின் தோப்பில் உள்ள ஓர் கல் துண்டில், வளவராய குப்பத்திலுள்ள கூட்டத்தார் களால் கோயிலுக்கு நிலம் தானம் செய்யப்பட்டது.

மேற்கண்ட கல்வெட்டுக்களால் கோயிலைப்பற்றியும் மூர்த்திகளைப்பற்றியும், இத்தலத்துக்குப் பக்கத்திலுள்ள நாடு ஊர்களைப்பற்றியும், அக்காலத்து மன்னர்களைப் பற்றியும், கோயிலுக்குத் தானம் செய்யப்பட்ட பல தருமங்களைப்பற்றியும் பல விவரங்கள் தெரியவரு கின்றன.

## 15. புராண வரலாறுகள்

இத் தலத்தைப்பற்றிய பெருமைகளும், வரலாறு களும் வேதவியாசர் வடமொழியில் இயற்றிய சிவமகா புராணத்தில் ஈசான சம்ஹிதையிலும், ஸ்ரீ பாத்ம புராணத்திலும், ஸ்காந்தபுராணத்திலும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஈசான சம்ஹிதை 30 அத்தி யாயங்களைக் கொண்டது. இவைகள் தேவஸ்தானத்தில் அச்சாக்கப்பட்டுள்ளன. இவைகளில் அடங்கிய வரலாறு களாவன :—

கோமதிக்கரையில் உள்ள வசிட்டர் முதலிய முனி வர்கள் சூதமுனிவரிடம் சிவபுராணத்தைக் கேட்டது, கஜாசுரன் உற்பத்தியும், சம்ஹாரமும், வழுவூர்ப் பெயர்க் காரணம் ஏற்பட்டது, பிரமன் படைப்புத் தொழிலைக்குறித்துத் தவம் செய்தது, ஈசானம் முதலிய

5 தீர்த்தங்களை ஏற்படுத்தியது, பெருமான் தோன்றி காட்சியளித்தது, பிப்பலாரண்யப் பெருமை, கண்ண பிரானுக்கு அருள்செய்தது, விக்ரம சோழன் சனி தேவ ஞல் துன்புறுத்தப்பட்டு வழுவூரை அடைந்து அருள் பெற்றது, சனி தேவன் பெருமானை வழிபட்டது, கல்மாஷபாதச் சோழன் வழுவூர்ப் பெருமானை வழி பட்டு அருள் பெற்றது, பஞ்ச வனங்கள் சூழப்பெற்றது, ஓர் அந்தணனின் தாய் ஹைமவதி என்பவள் சிவத் தியானம் செய்து அருள் பெற்றது, சம்புசர்மா என் பவன் தேவியைப் பூஜித்து அருள்பெற்றது, வீரசோழன் ஆராதித்தது, தேவதாருவனத்தில் உள்ள முனிவர்கள் கருமம் ஒன்றே முத்திக்குச் சாதனம் என்றெண்ணி வந்தபோது அவர்களுக்குப் பெருமான் பிக்ஷாடன ரூபங் கொண்டு ஞான உபதேசம் செய்யச் சென்றது, முனி வர்கள் பெருஞ்சேரியில் ஆபிசாரயாகம் செய்து பல உயிர்ப் பொருள்களை வரச் செய்து பெருமானிடம் ஏவுவது, பெருமான் தன் பெருஞ் சக்தியால் அவைகளை அடக்கி முனிவர்களுக்கு அருள்வது முதலியன. இவ் வரலாறுகளில் சில சுருக்கமாய்க் கூறப்படும்.

## 1. பெருமான் யானைத் தோலைப் போர்த்தது

எல்லாவற்றையும் கடந்த இறைவனுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று நிலைகள் உண்டு. அருவம் என்பது புறக்கண்ணுக்குத் தோன்றாத உயர் நிலை. அருவுருவம் என்பது அருவமும் உருவமும் கலந்த இலிங்க வடிவம். உருவம் என்பது அவரவர்க்கு அருள் செய்யும் காரணமாக அவ்வப்போது எடுத்துவந்த உருவ

நிலை. 'செப்பிய மூன்றும் நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவுகாண்' என்று நூல்கள் கூறும். கோயில்களில் உற்சவ மூர்த்திகளாக உள்ள வடிவங்கள் சோமாஸ் கந்தர், நடராஜர், சந்திரசேகரர், பிக்ஷாடனர் முதலாகப் பலவகைப்படும். அவைகளுள் கஜ சம்ஹார மூர்த்தி ஒன்று. யானை உருவங்கொண்ட அசுரனைக் கொன்று தோலைப் போர்த்து நடனமாடிய பெருமான். ஒரு காலத்தில் யானை வடிவங்கொண்ட கஜாசுரன் என்பவன் பிரம்மனை நோக்கித் தவம்செய்து தேவர்களை வெல்லும்படியான வரம் வேண்டினன். பிரம்மதேவன் அவ்வாறே வரங்கொடுத்து 'சிவபிரான் எதிரில்மட்டும் போகாதே, போனல் வரம் அழிந்து போகும்' என்று சொல்லிச் சென்றான். கஜாசுரன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மிகுந்த துன்பங்களைச் செய்துவந்தான். அவர்கள் பெருமானிடம் சேர்ந்து சரணம் அடைந்தார் கள். கஜாசுரன் தனக்கு முடிவு நேரிட்டதால் பிரம்மன் சொல்லியிருப்பதை மறந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான். பெருமான் உக்கிரத்துடன் கஜாசுரனைக் கொன்று தோலைக் கிழித்துப் போர்த்துக்கொண்டு கஜன் மத்தகத்தில் நின்று நடனம் செய்து தேவர்களையும் முனிவர்களையும் காப்பாற்றினன். பெருமானுடைய எட்டு வீரச் செயல்களில் இதுவும் ஒன்றாகக் கூறப்படு கிறது. ஆன்றோர்கள் இவ் வீரச் செயலை ஆங்காங்கு எடுத்துக்காட்டி யுள்ளார்கள்.


'புரையுடையகரியுரிவைப் போர்வையானை' —அப்பர்.

'வடிவுடைமழுவேந்தி மதகரிஉரிபோர்த்து' —சுந்தரர்.

யானை மும்மதங்கொண்டு கட்டுக்கடங்காமல் திரிவது போல உயிர்களும் ஆணவம் முதலிய மும்மலங்கொண்டு தன்னையும் தலைவனையும் அறியாமல் மதிமயங்கும்போது பெருமான் ஆணவமாகிய யானையை அடக்கி அருள் செய்கிறான். "மன்றவர் அடியார்க்கென்றும் வழிப் பகை களிறேயன்றோ" என்று ஆன்றோர் கூறுவர். 'இந்திரியக் குஞ்சரத்தை ஞான இருங்கயிற்றால் சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்து' என்றபடி ஐந்து இந்திரியங் களாகிய யானைகளை ஞானப் பெருங்கயிற்றால் சிந்தனைத் தூணில் சேர்த்துக் கட்டவேண்டும் என்பர்.

## 2. பிக்ஷாடனர் வரலாறு

தாருக வனத்திலுள்ள முனிவர்கள் சிவபக்தி இல்லாமல் கர்மத்தாலேயே யாவற்றையும் அடையலாம் என்றெண்ணியிருந்தனர். அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாக்கக் கருதிப்பெருமான் அழகிய கோலத்துடன், கண்டவரை வசீகரிக்கும் தோற்றத்தோடு பலி ஏற்கும் முறையில் பிரம்ம கபாலம் கைக்கொண்டு முனிவர் களிடம் சென்றான். தங்களிடம் வந்த பெருமானைக் கடவுள் என்றறியாமல் அவனைக் கொல்ல எண்ணி அபிசாரயாகம் ஒன்றைச் செய்து அதிலிருந்து பல உயிர்ப் பொருள்களை வரச்செய்து பெருமானிடம் ஏவிக் கொல் லப் பார்த்தார்கள். பெருமான் தனது பேராற்றலால் அவைகளை எல்லாம் அடக்கியாண்டான். அந்த வேள்வி யிலிருந்து பூத பைசாசங்கள் வந்தன. அவைகள் பெருமானிடம் அணுகவில்லை. படபா என்னும் நெருப்பு வந்தது. பெருமான் அதைத் தாங்கினான். பிறகு புலி



பிக்ஷாடனர்

வந்தது. புலியைக்கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்துகொண்டான். மானும் மழுவும் வந்தன. அவைகளையும் ஏந்திக்கொண்டான். பிறகு பாம்புகள் தோன்றின. அவைகளை ஆபரணங்களாக அணிந்தான். பின்பு முயலகன் என்னும் அசுரன் தோன்றினான். அவனைக் கீழே தள்ளி முதுகின்மேல் ஏறி நின்றான். பிறகு மந்திரங்களை ஏவினார்கள். அவைகளை உடுக்கை வடிவத்தில் திருக்கரத்தில் தாங்கினான். முனிவர்கள் தாங்கள் செய்த செயல் பயன்படாததைக் கண்டு, வந்தவன் பெருமான் என உணர்ந்து வழிபடலானார்கள். பெருமானும் அவர்களுக்கு ஞான உபதேசம் செய்தான்.

"பிறங்கிய சீர்ப்பிரமன் தன்தலை கையேந்திப்
பிச்சையேற்றுண் டுழன்று நின்ற நாளோ."
—அப்பர்.

## 16 இலக்கியப் பாடல்கள்

### திருநாவுக்கரசர் பாடிய அட்டவீரட்டங்களைப்பற்றிய திருத்தாண்டகம்

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர்வீ ரட்டானம் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டை குடிவீரட் டானம்இவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன்தமரென் றகல்வர் நன்கே. 1

## வைப்புத்தலத்தைக் காட்டும் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
உருத்திர கோடிமறைக் காட்டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதாரத்தும்
வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகாவேதீச்
சுரம்வி வீசுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காணலாமே. 2

## யானை உரித்ததைக் குறிக்கும் பாடல்கள்

விரித்தபல் கதிர்கொள்சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவ னாகிவேழம்
உரித்துஉமை யஞ்சக்கண்டு ஒண்திருமணிவாய்விள்ளச்
சிரித்தருள் செய்தார்சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 3
(அப்பர்)

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யா அமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 4
(சம்பந்தர்)

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 5
(சுந்தரர்)

பேரானை ஈருரிவைப் போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப்—பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாநா ளல்ல உயிர். 6

(கபிலர்)

உற்றுரையாய் நன்னெஞ்சே ஓதக் கடல்வண்ணன்
உற்றுரையா வண்ணம்ஒன் றுனை—உற்றுரையா
யானை உரித்தானை அப்பனை எப்பொழுதும்
மானை உரித்தானை அடைந்து. 7

(பரணதேவர்)

## பொதுப் பாடல்கள்

### விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து. 8

### முருகன்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி. 9

## நடராஜர்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொன் பாதமும்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே. 10

## உமாதேவி

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர்என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 11

## தக்ஷிணமூர்த்தி

மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த்தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க்காட்சியின் கதுவ நல்கிய
செம்மலையலது உளம் சிந்தியாதரோ. 12

## நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி

வாழிதிரு நாவலூர்
வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர்
திருத்தாள் போற்றி. 13

## திருமால்

பச்சைமாமலைபோல் மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே
ஆயர்தம் கொழுந்தேஎன்னும்
இச்சுவை தவிரயான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே. 14

## அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

தருவூறிசை யாரமுதார் நிகர்
குயிலார்மொழி தோதக மாதர்கள்
தணியாமய லாழியி லாழவும் அமிழாதே

தழலேபொழி கோர விலோசன
மெறிபாசம காமுனே சூலமுள்
சமனார்முகில் மேனி கடாவினில் அணுகாதே

கருவூறிய நாளுமுநூ றெழு
மலதேகமு மாவலு மாசைக
படமாகிய பாதக தீதற மிடிதீரக்

8B
4-112



கனிவீறிய போதமெய்ஞ் ஞானமு
மியலார்சிவ னேசமுமே வர
கழல்சேரணி நூபுர தாளிணை நிழல்தாராய்

புருகூதன்மி னாளொரு பாலுற
சிலைவேடுவர் மானொரு பாலுற
புதுமாமயில் மீதணை யாவரும் அழகோனே

புழுகார்பனிர் பூசிய வாசனை
யுரகாலணி கோலமென் மாலைய
புரிநூலுமு லாவு துவாதச புயவீரா

மருவூர்குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமுமே புனை வளமூதூர்

மகதேவர்பு ராரிசதாசிவர்
சுதராகிய தேவசிகாமணி
வழுவூரில் நிலாவிநல் வாழ்வருள் பெருமாளே. 15

வழுவூர் நாதரின் வார்கழல் வாழ்க !

2913:38.21193
N50
112762

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி

86A / 2-71